Registered as Newspaper at the G. P. O. Under No. Q. D. 78

Donated by: 8935 78
PROF. K. KAILASAPATHY

# மனிதன்

University of Jaffna Sri Lanka
RECEIVED
1991.6.29
Periodicals Division
Library

மனிதன்
அஞ்சல்பெட்டி
எண் 81
யாழ்ப்பாணம்

விலை சதம் 50

| ஆத்மா 3 | இராகம் 1–2 | யூலை–ஆகஸ்ட் 1979 | பக்கங்கள் 12 |
|---|---|---|---|

## ஜனநாயகம்

ஜனநாயகம் என்றால் மக்களுடையது, மக்களுக்கானது மக்களால் ஆனது, இரு இனம் வாழும் தீவில் மனித உரிமைகள் சமன் செய்து சீர்தூக்கும் தராசு போல் அமைந்து ஒரு பக்கம் சாயாத வகையில் அமைக்கப்பட வேண்டும். இப்படித்தான் ஜனநாயகம் இருக்க வேண்டும் எப்படியும் இருக்கலாம் என்பது ஜனநாயகம் அன்று இந்த வகையில் ஒரு ஜனநாயக நாட்டில் சட்டத்தை யார் மீறினாலும் குற்றவாளிகளே. குற்ற வாளிகள் கண்டு பிடிக்கப் படவேண்டும் குற்றத்திற்குரிய தண்டனை வழங்கப்பட வேண்டும் இது ஜனநாயகமாகும் ஆனால் சந்தேகநபர்கள் எல்லோரும் குற்றவாளிகள் அல்ல, குற்றவாளிகளைச் ஜனநாயகத்தின் வழிகாட்டலில் தெரிந்து கொள்ளவேண்டும், சர்வாதிகாரத்தின் அல்லது பயங்கரவாதத்தின் வழிகாட்டலில் அல்ல,

இதயம்

இன்று இத்தீவில் பரவலாகவும் குறிப்பாகத் தமிழ்ப் பகுதிகளில் சிறப்பாக யாழ் குடாநாட்டில் அவசர காலச் சட்டம் அமுலில் உள்ளது, ஒடுக்கப்படும் தமிழ் இனம் பல போராட்ட வடிவங்களை எடுத்துள்ள இதே நேரத்தில் பயங்கரவாத நடவடிக்கைகளை அரசு அடக்க முற்பட்டுள்ளது [பயங்கரவாதம் ஒழிக்கப்பட வேண்டுமானால் பயங்கரவாதத்தையும் புரிபவர்கள் கண்டுபிடிக்கப்படவேண்டும் அப்பாவித் தமிழர்களையும், சந்தேகத்திற்கிடமான தமிழ் இளைஞர்களையும் பயங்கர வாதிகளாகக் காண்பது ஜனநாயகமாகாது பயங்கரவாதிகள் என்று வர்ணிக்கப்படுவோர் பிடிக்கப்படவேண்டும் விசாரிக்கப்பட வேண்டும், நிரூபிக்கப்படவேண்டும் உரிய தண்டனை வழங்கப்படவேண்டும், அதுதான் ஜனநாயகம். [தணிக்கை]

ஒரு இனத்தின் உரிமைக்குரலுக்கு மதிப்பளிக்களிக்காது நடந்து கொள்வது ஜனநாயகமாகாது. ஜனநாயகத்தில் நம்பிக்கை உள்ளவர்களுக்கு சர்வாதிகாரத்தில் அசைக்கமுடியாத நம்பிக்கை பற்று இருக்கிறது. சர்வாதிகார நடவடிக்கைகளை மேற்கொள்பவர்கள் ஜனநாயகத்தையும், தார்மீகத்தையும் பெரிதாகப் போதிக்கின்றார்கள், தமிழ்ப்பகுதியில் உள்ள பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கை முழுத் தமிழர்களின் விடுதலை உணர்ச்சிக்கு எதிரான ஒரு நடவடிக்கையாய் அமையுமானால் எதிர்காலத்தில் தமிழர்கள் விடுதலைப் போரில் எவ்வளவு கஷ்டமான கசப்பான துன்பங்களை அனுபவிக்கவேண்டியிருக்கும் என்பதை எண்ணிப் பார்த்து நாம் செயற்படவேண்டும் ★

## தமிழ் நெஞ்சே தாழ்திறவாய் !

தமிழ் நெஞ்சே தாழ் திறவாய்! தமிழ்ப் பிரதேசத்தில் இதுவரை அனைவர்க்கும் திறக்கப்படாத ஆலயங்களின் பட்டியலை தொகுதிவாரியாக "மனிதன்" மூலம் தமிழ் மக்களுக்குத் தர இருக்கின்றோம், எங்களால் தவற விடப்பட்ட ஆலயங்களின் விபரங்களையும் நாம் எடுத்த பட்டியல் தவறானதாயின் அதுபற்றிய உண்மையான தகவல்களையும் தமிழ் மக்களிடமிருந்து எதிர்பார்க்கிறோம்.

முதலில் மானிப்பாய்த் தொகுதியில் உள்ள திறக்கப்படாத ஆலயங்களின் பட்டியலை தமிழ் மக்களின் பார்வைக்கு விடுக்கின்றோம். இதே போன்று ஏனைய தொகுதிகளின் பட்டியலையும் அடுத்தடுத்த இதழ்களில் தருகின்றோம்;

பட்டியல் பின்வருமாறு:

1 சண்டிலிப்பாய் இரட்டயப் புலம் வயிரவர் கோயில்
2 சண்டிலிப்பாய் கல்வளைப் பிள்ளையார் கோவில்
3 சண்டிலிப்பாய் ஆலங் குள முருக மூர்த்தி கோவில்
4 மாகியப்பிட்டி கண்ணகை அம்மன் கோவில்
5 தாவடி உப்பு மடம் பிள்ளையார் கோவில்
6 சூராவத்தை அம்மன் கோவில்
7 ஏழாலை அம்பலவாணேஸ்வரர் கோவில்
8 ஏழாலை தெற்கு பிள்ளையார் கோவில்
9 ஏழாலை இலந்தை கட்டி ஞானவைரவர் கோவில்
10 குப்பிளான் கொக்கர் வளவு சோதி விநாயகராலயம்
11 குப்பிளான் கன்னிமார் அம்பாள் ஆலயம்
12 குப்பிளான் காளிகோவில்

சண்டிலிப்பாய் இரட்டையப்புலம் வயிரவர் கோவில் கல்வளைப் பிள்ளையார் கோவில், குப்பிழான் கற்கரைக் கற்பக விநாயகராலயம், ஏழாலை அம்பலவாணேஸ்வர ஆலயம், என்பவற்றில் கதவடைப்புக்கு எதிராக போராட்டங்கள் நடைபெற்றன. சண்டிலிப்பாய் ஆலயங்களில் அங்கு வாழ்கின்ற தாழ்த்தப்பட்டதாகக் கருதப்படும் மக்களால் போராட்டம் நடைபெற்றது ஆனால் ஏழாலை, குப்பிளான் என்பவற்றில் போராட்டங்களை அங்கு வாழ்கின்ற உயர் மட்ட இளைஞர்கள்தான் நடாத்தினார்களே தவிர ஒடுக்கப் பட்டதாகக் கருதப்படும் மக்கள் அவற்றில் பங்கு கொள்ள வில்லை. நாம் மேற்கொண்ட ஆய்வின் படி மானிப்பாய்த் தொகுதியில் 12 கோவில்கள் திறக்கப்படாமல் இருக்கின்றன. ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலையும் இலக்கியமும்

— சாராங்கன் —

விடுதலை என்பது தற்கால உலகில் பலவிதமான அர்த்தங்களில் பாவிக்கப்படுகிறது. விடுதலை என்பது தனியே அரசியல் அல்லது இன விடுதலையை மாத்திரம் கருதுவதன்று. எல்லா மனிதர்களும் தமது ஆளுமையை தமது மனிதத்துவத்தை வெளிப்படுத்தக் கூடியதான ஒரு தடையற்ற சூழ் நிலையை உருவாக்குவதே விடுதலையாகும், விடுதலை என்பது மனிதனை அவனது ஆளுமையை வெளிப்படுத்தவிடாது அமுக்கும் அரசியல் சமூக பொருளாதார நெருக்குதல்களிலிருந்து அவனை விடுவிப்புதாகும் இதற்கு அப்படி மனிதனை அமுக்கும் அரசியல், சமூக பொருளாதார சூழ் நிலைகளை மாற்றியமைப்பதாகும்.

ஒரு மனிதன் அல்லது ஒரு மக்கட் கூட்டம் விடுதலை அடைவதற்கு தான் அல்லது தாம் எவ்விதமான ஒடுக்கப்பட்ட நிலையில் உள்ளனர் என்பதை முதலில் உணரக்கூடிய நிலை (Awareness) ஏற்படவேண்டும். ஒரு அடிமைதான் அடிமை என்ற நிலையை உணர்ந்து கொள்ளும்போது அவன் அரைச் சுதந்திரன் ஆகிறான்'' என்று ஒரு அறிஞர் குறிப்பிட்டார். எனவே ஒடுக்கப்பட்ட மக்களுக்கு அவர்களது ஒடுக்கப்பட்ட நிலையை எடுத்துக் காட்ட இலக்கியம் ஒரு கண்ணாடியாக முடியும்.

இலக்கியம் என்னும்போது கட்டுரையும் ஒரு இலக்கிய வடிவம்தான். மக்களின் நிலையை அவர்களுக்குக் கட்டுரைகள் மூலம் எடுத்துக் காட்டலாம். ஆனால் பலவிதமான பொழுதுபோக்குகளோடு கூடிய இந்த அவசர யுகத்தில் கட்டுரைகளை வாசிக்கப் பலருக்கு சிரத்தையோ அவகாசமோ இல்லாதிருக்கலாம். கவிதை, சிறுகதை நாவல் நாடகம், திரைப்படம் என்பன பொழுதுபோக்குச் சாதனங்களாக அமைவதுடன் சிறந்த இலக்கிய வடிவங்களாகவும் அமைகின்றன. ''காமிரா கைத்துப்பாக்கியாகப் பயன்படுத்த முடியும்'' என்று திரைப்படக் கலைஞரான லெஸ்ரர் பீரிஸ் குறிப்பிட்டுள்ளார். எனவே இவ்விலக்கிய வடிவங்களை சமூக நிலையை அடிப்படையாகக் கொண்டு படைப்பதன் மூலம் தமது நிலைபற்றிய உணர்வை ஒடுக்கப்பட்ட மக்களிடையே ஏற்படுத்தலாம்.

இலக்கியம் காலத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாக மாத்திரம் இருத்தல் கூடாது; 'பழையன கழிதலும், புதியன புகுதலும்' என்ற நிலைமாறி பழையன கழித்தலும் புதியன புகுத்தலும் என்ற நிலையை இலக்கியங்கள் ஏற்படுத்தவேண்டும். சமுதாய விடுதலைக்கெதிரான பழைய கருத்துக்களைச் சாடி அழிக்கவேண்டும். விடுதலைக்கு ஏதுவான கருத்துக்களைப்புகுத்தவேண்டும். இலக்கியங்கள் ஒரு சமுதாயத்தின் நிலையைக் குறிப்பிட்டால் மாத்திரம் போதாது இந்நிலையை மாற்ற முற்படுபவர்களின்வாழ்க்கை அவர்களுக்கு ஏற்படும் சோதனைகள் எதிர்ப்புக்கள் அவர்களது தோல்விகள், வெற்றிகள் என்பவற்றைத் தங்கள் கற்பனா சக்தியினால் சித்திரிப்பதன் மூலம் எதிர்கால விடுதலை வீரர் வீராங்கனைகளை உருவாக்கவேண்டும். மக்களை மாற்றத்திற்குத் தயார்படுத்த வேண்டும். இவ்விடுதலை வீரர் வீராங்கனைகள் தனியே அரசியல் விடுதலைக்குப் போராடுபவர்களாக இல்லாமல் அரசியல், சமூக பொருளாதார விடுதலைக்கு பூரண மனிதத்துவத்திற்குப்போராடுபவர்களாகச் சித்தரிக்கப்பட வேண்டும். இலக்கிய கர்த்தாக்கள் ஒரு பூரண சுதந்திர சமுதாயத்தைப் படம் பிடித்துக் காட்டுவதன் மூலம் அவ்வித சமுதாயத்தை அடைய வேண்டும் என்ற வேட்கையை மக்கள் மனதில் ஏற்படுத்த வேண்டும்.

சோவியத் ருசியாவில் மார்க்சிம் கோர்க்கி என்பவரின் நாவல்களும், எழுத்துக்களும் மக்களை விசேடமாக இளைஞர்களை சுதந்திரப் புரட்சிக்குத் தயார் செய்வதிலும், அவர்களைப் புரட்சி வழியில் நடை போடச் செய்வதிலும், சமூக நிலைபற்றிய உணர்வை மக்களிடையே ஏற்படுத்துவதிலும் முக்கிய இடம் வகித்தன. ரூசோ, வொல்ரயர், மொன்டெஸ் கியூ என்பவர்களின் நாடகங்களும், எழுத்துக்களும் பிரான்சியப் புரட்சியை உருவாக்குவதில் பெரும் பங்கு வகித்தன,

பூரண விடுதலை வேண்டின் தீவிர செயல்களில் இறங்குதல் வேண்டும். தீவிரமாகச் செயல்பட செயல் பற்றிய அறிவுடன் செயல்படுவதற்கான உணர்ச்சியும் அவசியம் இவ்வுணர்ச்சியை இலக்கிய கர்த்தாக்கள் ஏற்படுத்த முடியும். இந்தியாவில் மக்கள் மனதில் தேசிய உணர்ச்சியை விடுதலை உணர்ச்சியை ஏற்படுத்துவதில் மகாகவி தாகூரினது இலக்கியப் படைப்புக்களும் மகாகவி பாரதியின் தேசிய கீதங்களும் சமூகப் பாடல்களும் பெரும் பங்கு வகித்தன, பெண் அடிமைத் தனம் சாதி முதலியன பற்றிய பாரதி பாடல்கள் சமூக விடுதலைக்கான உணர்ச்சியை கிளறுவனவாக அமைந்துள்ளன பாரதிதாசன்பாடியபாட்ல்கள். தமிழர்களிடையே தாம் ஒரு தனி இனம் என்ற உணர்ச்சியை ஏற்படுத்துகின்றன, தமிழ் ஈழக் கவிஞன் காசி ஆனந்தன் பாடியுள்ள சில பாடல்கள் தமிழ் மக்களிடையேயும் விசேடமாக இளைஞர் யுவதிகளிடையேயும் இன விடுதலை உணர்ச்சியைப் பெரிதும் ஏற்படுத்தியுள்ளன. இதுபோன்றே செ, கணேசலிங்கம, கே, டானியல் டொமினிக் ஜீவா போன்ற எழுத்தாளர்களின் படைப்புக்கள் சமூக பொருளாதார விடுதலை உணர்வை தூண்டுகின்றன- எனவே விடுதலைப் போராட்டத்தில் இலக்கியங்களும், இலக்கிய கர்த்தாக்களும் முக்கிய இடம் வகிக்கின்றனர் கருத்துப் புரட்சியை ஏற்படுத்துவதில் புரட்சிக்கு அவர்களை உந்துவதில் இலக்கிய கர்த்தாக்கள் முக்கிய பங்காளர்களாக உள்ளனர், ''கத்தி முனையிலும் பேனா முனை கூரியது'' என்றான் ஒரு பேரறிஞன், வில்லேர் உழவர் வலியினும் சொல்லேர் உழவர் வலி அதிகம் என்று கூறினான் வள்ளுவன். எனவே விடுதலைப் போராட்டத்தில் தமது முக்கிய பங்கை உணர்ந்து இலக்கிய கர்த்தாக்கள் செயற்படவேண்டும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் பிரதேசத்தின் மீன்பிடித் தொழில்

## ஓர் அறிமுக ஆய்வு

[கணபதிப்பிள்ளை சச்சிதானந்தன், M. Sc., முன்னாள் விலங்கியல் விரிவுரையாளர், யாழ்ப்பாணம் பல்கலைக் கழகம்]

முகவுரை: இக்கட்டுரையில், தமிழ் பிரதேச மீன்பிடித் தொழிலின் இன்றைய நிலைமைகளும், எதிர்கால நிலைமைகளும் விரிவாக எடுத்துக் காட்டப்படுகிறது

### பிரதேசம்:

தமிழ்ப்பிரதேசத்தின் வரலாற்று ரீதியான எல்லைகளைச் சின்னத்தம்பி என்பவர் 1977ம் ஆண்டு எடுத்துக் கூறியுள்ளார்: வேறு விபரமான ஆய்வுகள் கிடைக்காத படியினால் தமிழ் ஈழத்தின் தரை, கடல் சார்ந்த பொருளாதார வலயங்களின் பரப்புகளின் ஆய்விற்குச் சின்னத்தம்பி எடுத்துக்காட்டிய எல்லைகளே அடிப்படையாகக் கொள்ளப்பட்டுள்ளது. பாக்கு நீரிணையினூடாகவும், மன்னார்க்குடாவினூடாகவும் செல்லும் எல்லைக்கோடானது இலங்கையையும், இந்தியாவையையும் பிரிக்கின்றது. 1975ம் ஆண்டு இரு அரசாங்கங்களும் இதனை ஏற்றுக்கொண்டுள்ளன. இவ்வெல்லையையே கடல் எல்லையாகச் சின்னத்தம்பி கூறுகின்றார்: அவரது பொருளாதார வலய எல்லைக் கோடானது ஐக்கிய நாடுகளின் மகாநாட்டில் பரீட்சார்த்தமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கடல் எல்லை விதிகளின்படி வங்காள விரிகுடாவினுள் கரையிலிருந்து 200 மைல் தூரம் வரை நீண்டுள்ளது.

### தமிழ் பிரதேசத்தோடு இணைவான கடற்பிரதேசம் வருமாறு:

புத்தளம் மாவட்டத்திலுள்ள கொச்சிக்கடையிலுள்ள வாய்க்கால் ஆறு தொடக்கம் அம்பாறை மாவட்டத்திலுள்ள பொத்துவில் தெற்கிலுள்ள கும்புக்கன் ஆறுவரை நீண்டுள்ள 800 கிலோ மீற்றர் கடற்கரையோரத்தைக் கொண்டுள்ளது. இந்த 200 மைலினுள் உள்ள கண்ட மேடையானது கிழக்குக் கரையில் சம ஆழமுள்ளதாகவும். ஒடுக்கமானதாகவும் கரைக்கு அண்மையிலும் காணப்படுகிறது. ஆனல் மன்னார் தீவிற்கும் அதைச் சுற்றியுள்ள பாக்கு நீரிணைக்கும் கீழே இக்கண்டமேடை விரிவடைந்து இந்திய கண்டமேடையுடன் தொடர்ந்துள்ள பெரும்பரப்பையடக்கும் மன்னார் வளைகுடாவாக உள்ளது. தமிழ் ஈழத்தின் மொத்த பரப்புள்ள கண்ட மேடையின் மொத்த பரப்பு 19000 சதுர கிலோ மீற்றராகும்.

கிழக்குக் கரையின் ஓரங்கள் பெருமளவு கடலேரிகளையும், விரிகுடாக்களையும் கொண்டுள்ளது. இவையும் வடக்கே யாழ்ப்பாணக் குடாநாட்டினுள்ளேயும் சுற்றியும் உள்ள ஆழங்குறைந்த கடலேரிகளும் கரையையடுத்து உள்ளே நீண்டும் உவர்நீர் நிலைகளாகவும் காணப்படுகின்றன.

வன்னிப் பிரதேசத்திலும் கிழக்குப் பகுதிகளிலும் நீர்ப்பாசனத்திற்காக அமைக்கப்பட்ட நன்னீர்த் தேக்கங்கள் நிலையான உள்நாட்டு மீன்பிடிப் பண்ணைகளாகப் பயன்படுகின்றன.

### தற்போதைய மீன்பிடி முயற்சிகள்

தமிழ் பிரதேசமானது தனது மதிப்பிடப்பட்ட (1973) சனத்தொகையான 1,966,400-ல் 157,771 மீனவர்களையும் 488 மீன்பிடிக் கிராமங்களையும் கொண்டுள்ளது. அது சராசரியாக ஒரு வருடத்தில் 3-05 வீதத்தால் அதிகரித்துக்கொண்டு செல்கிறது. மொத்த சனத்தொகையிற் கிட்டத்தட்ட 8·5 வீதமானோர் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். இந்த 201,771 பேரில் (1979) 25 வீதமானோரே உண்மையான மீனவர்களாகும். மற்றையோர் வேறு துணைத்தொழில்களிலும் ஈடுபட்டுள்ளனர்.

வுவுனியா, மட்டக்களப்பு மாவட்ட விபரங்கள் அட்டவணை 1ல் தரப்பட்டுள்ளன. இங்கு 80% மான மீன்பிடி முகாமைத்துவப் பிரிவுகளும் கடலேரி மீன்பிடியில் ஈடுபட்டுள்ளன:

அட்டவணை 1

தமிழ் பிரதேசத்தின் மதிப்பிடப்பட்ட சனத்தொகை மீன்பிடிப்போர் தொகை மீன்பிடிக் குடும்பங்கள் மற்றும் விபரங்கள் (1973 ம் ஆண்டு எண்ணிக்கைகள்)

1952-ல் ஜி. ஜி. பொன்னம்பலம் மீன்பிடி மந்திரியாக இருந்த பொழுது இயந்திர மீன்பிடி வள்ளங்கள் முதன் முதலில் தீவில் அறிமுகப்படுத்தப்பட்டது. 1973-ல் 13912 மீன்பிடிக்கலங்கள் தமிழ் பிரதேசத்திலிருந்தன. இதில் 25% இயந்திரமயமானவை. இதில் அரைவாசி இயந்திரமயமாக்கப்பட்ட கட்டுமரம், வள்ளம் போன்ற பாரம்பரியமீன்பிடிக் கலங்களாகும். மிகுதி அரைப்பகுதி புகுத்தப்பட்ட 8 மீற். கண்ணாடிக் கலங்களாகும் இருவகைக் கலங்களும் கண்ட மேடைப் பகுதியின் உள்ளேயும் சுற்றியும் இயங்கின;

அட்டவணை 2 விபரங்களைத் தருகிறது.

மீன்பிடிக்குத் தேவையான பாரம்பரிய உபகரண பொருள்களைத் தற்பொழுது செயற்கை நார்கள் மாற்றிடு செய்துள்ளன. இன்று நைலோன், குறுலோன் வேறு பொலிஎசுத்தர் நார்கள் என்பவற்ருலான மீன்பிடி வலைகள் பரவலாக உபயோகிக்கப்படுகின்றன. பெரும்பாலான மீனவர்கள் பூ வலையை (gill Nets) இயந்திர மீன்பிடி கலங்களுடன் உபயோகிக்கின்றனர். கரைவலையானது பெரும்பாலும் கரையிலிருந்தே பாவிக்கப்படுகிறது: மடிவலை முறை (Purse Seining) தற்பொழுதும் பரீட்சார்த்த நிலையிலேயே உள்ளது. பூவலை போடும் மீனவர்கள் மடிவலை பாவனைபற்றிக் குறைப்படுகின்றனர். தூண்டிலிட்டு மீன்பிடித்தல் இன்றும் ஓரளவு நடைபெற்று வருகிறது;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 1

| மாவட்டம் | மதிப்பிடப்பட்ட சனத் தொகை | மொத்த மீன் பிடிப்போர் தொகை | மொத்த சனத்தொகையில் மீன் பிடிப்போர் தொகை %களில் | மீன் பிடிப்போர் சனத்தொகையில் மீன் பிடியில் ஈடுபட்டோரின் % | மீன்பிடிக் குடும்ப எண்ணிக்கை | கடலேரி மீன்பிடியில் ஈடுபட்டுள்ள முகாமைத்துவ அலகுகளின் % | மீன்பிடிக் குடும்ப மொன்றின் சராசரி நபர்களின் எண்ணிக்கை | மீன்பிடிக் குடும்ப மொன்றின் சராசரி மீனவரின் எண்ணிக்கை | மீன்பிடிக் கிராமங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| புத்தளம் | 390, 400 | 35, 665 | 9·14 | 30·3 | 6289 | 36·4 | 5·6 | 1·7 | 132 |
| மன்னார் | 80, 400 | 12, 022 | 14·95 | 23 7 | 2093 | 9·5 | 5·7 | 1·4 | 32 |
| யாழ்ப்பாணம் | 716, 500 | 41, 033 | 5·75 | 26·4 | 7966 | 34·0 | 5·1 | 1·4 | 107 |
| வவுனியா + முல்லைத்தீவு | 99, 400 | 4, 874 | 4·9 | 27·7 | 919 | 85·0 | 5·3 | 1·5 | 20 |
| திருகோணமலை | 199, 700 | 13, 263 | 6·6 | 21·2 | 2348 | 26·0 | 5·6 | 1·2 | 61 |
| மட்டக்களப்பு | 266, 900 | 25, 323 | 9·5 | 27·2 | 4679 | 80·0 | 5·4 | 1·2 | 91 |
| அம்பாறை | 213, 100 | 25, 691 | 9·1 | 21·9 | 4686 | 63·0 | 5·4 | 1·2 | 45 |
| மொத்தம் | 1966, 400 | 157, 771 | 8·5 | 25·5 | 28980 | 47·7 | 5·4 | 1·4 | 488 |

அட்டவணை 2

| மாவட்டம் | மொத்த மீன்பிடிக் கலங்களின் எண் | புகுத்தப்பட்ட வற்றின் % | இயந்திர மயமாக்கப்பட்ட பாரம் பரிய கலங்களின் % | இயந்திர மயமாக்கப் படாத கலங்களின் % |
|---|---|---|---|---|
| புத்தளம் | 3604 | 15·9 | 15·7 | 68·4 |
| மன்னார் | 824 | 15·5 | 10·8 | 73·7 |
| யாழ்ப்பாணம் | 4935 | 7·8 | 20·0 | 72·2 |
| வவுனியா | 432 | 9·2 | 39·6 | 51·2 |
| திருகோணமலை | 1089 | 10·2 | 3·8 | 86·0 |
| மட்டக்களப்பு | 2308 | 3·3 | 3·3 | 93·4 |
| அம்பாறை | 720 | 0·4 | 5·1 | 94·5 |
| மொத்தம் | 13,912 | 9·00 | 14·04 | 77·0[illegible] |

கடலேரி மீனவர்களிடையே முக்கியமாக கிழக்குக் கரையோரத்தில் வீச்சு வலை பெரும் பிரசித்தமானதாகும். கிழக்குக் கரையோரத்தின் 60—70% பிரிவுகள் வீச்சு வலையையே பாவிக்கின்றன. மெதுவான மீன்பிடிமுறைகளான கட்டுவலை, சிறகுவலை போன்றவை யாழ்ப்பாண, புத்தள கடலேரிகளிற் பிரசித்தமானவை. ஆழ்கடல் மீன் இனங்களைப் பிடிப்பதற்கும் ஊக்கமுள்ள பெரும் மூலதன திட்ட முகாமையாளர்களால் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இது உண்மையில் தமிழ் ஈழ பாக்கு நீரிணைப் பிரதேசத்தினுள் அனுமதியின்றி நுழையும் தமிழ் நாட்டின் 9 மீற் வகுப்பு இழுவைக் கப்பல் படைகளால் தூண்டப்பட்ட ஒரு தொடக்க நிலையாகும். தமிழ் பிரதேசத்தில் வெவ்வேறு மீன்பிடி முறைகள் பரந்துள்ள விபரங்களை அட்டவணை 3 தருகிறது.

→ 9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுயஆட்சி என்பது சுதந்திரம் ஆகிடுமா ?

## ஸ்பெயின் நாட்டு பாஸ்க் தேசிய இனத்திற்கு சுயஆட்சி

ஸ்பெயின் நாட்டில் பாஸ்க் என்னும் சிறுபான்மைத் தேசிய இனம் சுதந்திரம் கோரிப் போராடி வருகிறது; இதற்கு ஈடுகொடுக்க முடியாத ஸ்பானிய அரசு அவர்களுக்குப் பிரதேச சுயாட்சி வழங்க இப்போது முன்வந்திருக்கிறது. எனினும் சுதந்திரப் போராட்டம் தொடர்கிறது; ஏசியாவீக் சஞ்சிகையில் வெளிவந்த கட்டுரையின் தமிழாக்கம் இது:

குண்டுகள் வெடித்தன; அந்த ஸ்பானிய சூரிய பிரகாசத்தில் திளைத்திருந்த உல்லாசப்பிரயாணிகள் பொலிஸ் பாதுகாப்பை அடைந்து விட்டார்கள்தான்; ஆனால் அழகிய கடற்கரைகளைத் தகர்த்த வெடிகள் ஸ்பெயினின் உல்லாசப் பயணத்துறையை நாசப்படுத்தி விட்டன. மத்திய ஆட்சியைப் பலவீனப்படுத்தும் தொடர்ச்சியான முயற்சிகளில் பாஸ்க் பிரிவினை இயக்கம் கடைசியாகக்கைக் கொள்ளும் தந்திரந்தான் நாட்டின் மிகமுக்கிய வருமானத்துக்குரிய உல்லாசப் பிரயாணத்துறையை அழித்தொழிப்பது. 1978-ஆம் ஆண்டில் உல்லாசப் பயணிகள் ஸ்பெயினில் செலவிட்ட 500 கோடி அமெரிக்கடாலர் பணம் ஸ்பானிய வர்த்தகத் துறைப்பற்றாக்குறையை ஈடுகட்டுமளவிற்குப் போதுமானதாயிருந்தது; இவ்வருடம் பிரதானமாக பிரான்ஸ், ஜேர்மனி, பிரிட்டனிலிருந்து 4கோடி வெளிநாட்டுப் பயணிகள் ஸ்பெயினின் சூரியப் பிரகாச மத்தியதரைக் கரைகளான கொஸ்ராபிராவா, கொஸ்ரா-டெல்சொல் போன்ற இடங்களில் ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகிறார்கள்.

உல்லாசப் பயணத்துறையைப்போல் இலகுவாகப் பாழடிக்கப்படக்கூடிய வேறு தொழில் துறைகள் இல்லை; இது அரசியல் நோக்கங்களை வன்முறையால் அடையத் துடிப்போருக்கு நன்றாகத்தெரிந்த விடயம். உல்லாசத்தலக் குண்டு வீச்சுக்கள் பாஸ்க் ETA கொரில்லா இயக்கத்தின் 'தீவிரம் குறைந்த' பிரிவின் கைங்கரியந்தான்; வெடிப்பு கட்குமுன் விடுக்கப்பட்ட எச்சரிக்கை அறிவிப்புகள் இதனை உணர்த்துகின்றன. அதிதீவிரபிரிவும் தன் வேலையை நடத்துகிறது. இவர்கள் 1978இல் 80க்கு மேற்பட்ட பொலிசாரையும் இவ்வருடம் இதுவரை 41 பொலிசாரையும் வீதிகளில் சுட்டு வீழ்த்தினர், வங்கிகளைக் கொள்ளையிடும் இலாபகரமான வர்த்தகத்தையும் இவர்களே மேற்கொள்கிறார்கள்; அண்மையில் ஒவீடோ வங்கியில் 16 லட்சம் அமெரிக்க டாலர்களை மிகக்கச்சிதமாகக் கொள்ளையிட்டு சாதனை ஏற்படுத்தினார்கள்.

பாஸ்க் தேசிய இனத்தவர்கள் தங்கள் சுதந்திர அபிலாஷையின் முதல் நிலையை அடையவுள்ள போதிலும் ETA கொரில்லாக்களின் கொடூரமான கொலைகளும் விட்டுக்கொடுக்காத தன்மையும் அப்படியே தொடர்கின்றன. இறுதியாக ஒரே நாடு என்ற கோட்பாட்டிற்குள்ளாக அதிக அளவு சுயாட்சி வழங்குவதாக இப்போது உறுதி அளிக்கப்பட்டுள்ளது; தொழிற்துறை, விவசாயம், உள்ளூராட்சி, உல்லாசத்துறை, போக்குவரத்து என்னும் அம்சங்களில் பாஸ்க் சுய ஆட்சிக்கான சாசனம் ஒன்றைப் பாராளுமன்றம் தற்போது விவாதித்து வருகிறது; பிரதேச சுயாட்சிக் கோட்பாடு இப்போதும் சில அரசியல் முட்டுக்கட்டைகளை எதிர்நோக்கியுள்ளது. ஆயினும் எந்தெந்த அளவிற்குப் பிரதேச அதிகாரங்களை அளிப்பது என்பதுதான் அதிக சச்சரவுகட்குரிய விடயமாக விளங்கி வருகிறது;

அப்பட்டமாகக் கூறுவதானால் அரசாங்கம் எதைக் கொடுக்க முன்வருமோ அது பெரும்பான்மையான பாஸ்க் மக்களுக்குப் போதுமானதாக இருக்காது; மறுக்கரையில் ஆபத்தான முன்செய்கை எதனையும் ஏற்படுத்திச் சென்று விடக்கூடாது என்பதில் பிரதமர் அடொல்வோ சுவாரெஸ் அறுதியான உறுதிபூண்டவராய் உள்ளார். மத்திய அரசாங்கத்தின் நியாயக் கட்டுப்பாட்டுக்குள்ளேயே பொலிஸ் இருக்க வேண்டுமென்பதில் அவர் பிடிவாதமாக இருந்து வருவதுடன் பாஸக்கள் தங்கள் வரிகளைத் தாமே அறவிடுவதற்கு ஒத்துக்கொள்ளவும் மறுத்துவருகிறார்.

பாஸ்க் மக்கள் ஐரோப்பாவின் தலை வணங்காத, ஒன்றுபட்ட சிறுபான்மை இனங்களில் முக்கியமானவர்கள். ரோம, முகலாய, ஹப்ஸ்பேர்க், போர்பொன், பலஞ்செஸ்ற் அடக்கு முறைகளுக்கெல்லாம் ஈடுகொடுத்து நன்றே நின்று நிலவிவரும் கலாச்சாரத்திற்குச் சொந்தமானவர்கள். பாஸ்க் கலாச்சாரத்தைக்கலப்படம் செய்து ஸ்பானியப் பேரின ஓட்டத்தில் அவர்களை இழுத்துறிஞ்சிச் செல்லக் காலஞ்சென்ற அதிபர் பிரான்சிஸ்கோ பிராங்கோ எடுத்த ஒட்டு மொத்தமான திட்டமிட்ட பழிவாங்கல் நடவடிக்கைகள் பாஸ்க் மக்களின் பிடிவாதமான, வலோற்காரமான எதிர்ப்பைச் சந்தித்தன. அவர்கள் மொழி, பிற மொழித் தொடர்பற்ற தனித்துவமான மொழி. யுஸ்கல்டுனக் (Euskaldunak) எனத் தம்மை அழைப்பார்கள்; காஸ்ரிலியன் கலாச்சார மேம்பாட்டுக் கூடாக வளர்க்கப்பட்ட ஏழு நூற்றாண்டுகள் பழமை வாய்ந்த பாரம்பரியங்களையும் தேசபற்றையும் பாதுகாத்து வருகிறார்கள்; 7½ இலட்சம் பாஸ்க் மக்கள் (அது ஸ்பானிய சனத்தொகையின் 2%) நான்கு வடபகுதி மாகாணங்களில் செறிந்து வாழ்கிறார்கள், இதோடு தொடர்பான பிரதேசமான பிரான்ஸ் எல்லையை அடுத்த மூன்று பகுதிகளில் இன்னும் 1¼ இலட்சம் மக்கள் வாழ்கிறார்கள்; தென் அமெரிக்கா ஐக்கிய அமெரிக்காவிலும் கூட பாஸ்க் இனமக்கள் வாழ்ந்து வருகிறார்கள்.

——→ 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசியத்துவம் ஒரு

> இது தேசீயத்துவம்: புனை உரைகளும் உண்மைகளும் என்றதலைப்பில் CHINTAKA என்பவரால் எழுதப்பட்டு கார்டியன் இதழில் வெளியான மார்க்சீயக் கண்ணோட்டக் கட்டுரையின் தமிழாக்கம்.

**புனையுரை 1** இலங்கை ஒரு ஓரின நாடாகும்

எதிரிடையாக அது 'பல இனங்களைக் கொண்ட அல்லது தேசிய இனங்களைக் கொண்ட ஒரு நாடாகும்: (பெரும் பகுதியான) சிங்கள தேசிய இனத்தையும், தமிழ் தேசிய இனத்தையும், தேசிய இனமாகக் கொள்ள முடியாத தோட்டத் தமிழர்கள், முஸ்லிம்கள், ஏனைய வேறும் பல தேசிய சிறுபான்மையினரையும் கொண்டுள்ளது.

2. வடக்கிலும், கிழக்கிலுமுள்ள தமிழ்மக்களை ஒரு தேசிய இனமாகக் கொள்ள முடியாது. ஏனெனில் முக்கியமாக அவர்களிடம் ஒரு தேசிய இனத்தின் இன்றியமையாத முதன்மைத்தேவைகளிலொன்ருகிய "தனியான பொருளாதாரம்" இல்லை,

இது பெரும்பாலான இடதுசாரிகள் வழமையாகக் கையாளும் ஒரு சாதுரியமாகும். விஞ்ஞான சோஷலிசம் தேசிய இனத்தின் வரைவிலக்கணத்தில் "தனியான பொருளாதாரத்" தைப் பற்றிக் கருதவில்லை. பொதுப் பொருளாதார வாழ்க்கை" பற்றியே அது கூறுகின்றது: இரண்டிற்குமிடையேயுள்ள வேறுபாடுகள் வெளிப்படையானவையாகும்.

சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட புகழ் பெற்ற வரைவிலக்கணத்தில் ஸ்ராலின் பின்வருமாறு கூறுகிருர். ஒரு தேசிய இனம் என்பது பொது மொழி; பொதுப்பிரதேசம் பொதுப் பொருளாதார வாழ்க்கை பொதுக் கலாச்சாரத்தைப் பிரதி பலிக்கும் உளவியல் ரீதியான உருவாக்கம் என்பவற்றின் அடிப்படையில் வரலாற்று ரீதியில் உருவாக்கப்பட்ட ஸ்திரமான மக்கள் சமுதாயமாகும்' பொருளாதாரணக் காரணிபற்றி பேசும் போது தனது இனமான ஜோர்ஜியாவை அவர் சுட்டிக் காட்டினர். ஜோர்ஜியர்கள் பொதுப்பிரதேசத்தில் வாழ்ந்து பொதுமொழி ஒன்றையும் பேசியபோதும் 19-ம் நூற்ருண்டின் முற்பகுதிவரை அது ஒரு தேசிய இனமாகக் கொள்ளப்படவில்லை. ஏனெனில் அவர்கள் பொதுப் பொருளாதார வாழ்க்கையொன்றைக் கொண்டிருக்கவில்லை. அவர்கள் பொருளாதார ரீதியிற் துண்டிக்கப்பட்ட பல குழுக்களாகச் சிதறியிருந்தனர். பல நூற்ருண்டுகளாக அவர்கள் ஒருவர்க்கெதிராக ஒருவர் போரிட்டுக் கொண்டும் ஒருவரையொருவர் கொள்ளையிட்டுக்கொண்டும் பேர்சியர்களையும் துருக்கியர்களையும் ஒருவர்க்கெதிராக மற்றவரைத் தூண்டிக் கொண்டுமிருந்தனர்;

அவர்களது தற்செயலான மேலோட்டமான இணைப்பு வெற்றியுடனரசாண்ட ஒரு சில அரசர்களின் முயற்சியால் ஒருவாறு கொண்டுவரப்பட்டது, அது மேலெழுந்த வாரியான ஒரு நிர்வாக எல்லையை நல்ல முறையில் ஏற்படுத்தியது. விலை வாசியின் ஸ்திரமற்ற தன்மையினலும், விவசாயிகளின் அசிரத்தையாலும் அது விரைவில் அழிந்து விட்டது: பொருளாதார ரீதியாக இணைப்புகளில்லாத ஜோர்ஜியாவும் இதேவகையினதே. 19-ம் நூற்ருண்டின் பிற்பகுதியிலேயே ஜோர்ஜியா ஒரு தேசிய இனமாக உருவாகியது: அடிமைமுறை வீழ்ச்சியடைந்து நாட்டின் பொருளாதார லாழ்க்கை வளர்ச்சியடைந்து தொடர்பு சாதனங்கள் விருத்தியடைந்து, முதலாளித்துவமுறை உருவாகி தொழிற்பாகுபாடு புகுத்தப்பட்டபொழுது. குழுக்களின் பொருளாதார தனிப்படுத்துகை தகர்க்கப்பட்டது, எல்லோரும் ஒன்ருகக் கொண்டுவரப்பட்டனர், நிலப் பிரபுத்துவத்தைக் கடந்து முதலாளித்துவ முறைக்கு வளர்ச்சியடைந்துள்ள எல்லா இனங்களுக்கும் "இதையே" கூறமுடியுமென ஸ்ராலின் இறுதியாகக் கூறினர். எனவே பொதுப்பொருளாதார வாழ்க்கை என்பது நிலப்பிரபுத்துவம் (தனியாக்கப்பட்ட தன்னிறைவுள்ள கிராம சமுதாயமுறை) முதலாளித்துவ சந்தைத் தொடர்புகள், தொழிற் பங்கீடு போன்ற அடுத்துள்ள பகுதிகளை இணைக்கும் உள் பொருளாதாரத் தொடர்புகள் மூலம் பிரதியீடப் படுவதையே குறிக்கிறது: இந்தப் பொதுப் பொருளாதர வாழ்க்கை என்னும் நிலைமையே அடிப்படையாக வடக்கில் காணப்படுகிறது. நிலப் பிரபுத்துவ காலத்துத்தனிப்படுத்தப்டுட்ட நிலையல்ல. எனவே தமிழ் மக்கள் சிங்கள தேசிய இனத்திலிருந்து வித்தியாசமான இனமாகக் கருதப்படுவதற்குரிய வரை விலக்கணத்தின் தேவைகளான சமூக – வரலாற்று இயல்புகளுடன் பொருளாதாரக் காரணியையும் கொண்டுள்ளனர்;

3. தமிழ் மக்கள் பாரபட்சமாக நடத்தப்படுவதாக இருக்கலாம் ஆனுல் அவர்கள் ஒரு ஒடுக்கப்பட்ட இனமல்ல

தேசிய இன ஒடுக்கல் என்பது என்ன? விஞ்ஞான சோஷலிச நோக்கின்படி, "தேசிய இன ஒடுக்கல் என்பது, ஒடுக்கப்படும் மக்கள் சுரண்டப்படுவது; கொள்ளையடிக்கப்படுவது; ஒடுக்கப்பட்டவர்களின் உரிமைகளைப் பலாத்காரமாகக் கட்டுப்படுத்தும் சட்டங்கள் என்பன ஒன்ருகச் சேர்ந்ததாகும் இது தேசிய இன ஒடுக்கற் கொள்கையாகக் கருதப்படுகின்றது. (போல்ஸ்விக் கட்சியின் 7-வது மகாநாட்டில் தேசியப் பிரச்சனை சம்பந்தமாக வெளியிடப்பட்ட ஸ்ராலின் அறிக்கையாகும்)

இந்த வரைவிலக்கணத்தின் படி தமிழர்கள், 1948டிலிருந்து தொடர்ந்து வரும் சிங்கள பூர்ஷவா அரசாங்கங்களினுல் நடைமுறைப்படுத்தப்படும் தேசிய இன ஒடுக்கற் கொள்கையினுல் துன்பப்படுகிருர்கள்: சிங்களம் மட்டும் அலுவலக மொழியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்க்சியக் கண்ணோட்டம்

கும். அரசியல் யாப்பில் பௌத்தத்திற்கு உயர் ஸ்தானம் அளிக்கப்பட்டுள்ளது. தேசியக் கொடியிலும் இவ்வாறே சிங்கள தகுதிகாண் பரீட்சையில் சித்தியடைதல் அகற்றப்படவில்லை, வெள்ளை இனவாதிகளும் சுயோனிஸ்டுகளும் பாவித்த குடியேற்ற காலனித்துவம் தமிழ்மக்களின் பாரம்பரிய குடியிருப்புகளைக் கைப்பற்றவும், சனத்தொகைச் சமநிலையை மாற்றவும் கைக்கொள்ளப்படுகிறது. வேலை வாய்ப்புகளில் சிங்களவர்கட்கு முன்னிடம் அளிக்கப்படுகிறது: தமிழ்ப் பகுதிகளில் அரசியல் புதிய முயற்சிகட்கு ஆட்கள் சேர்த்துக் கொள்ளப்படும்போது கூட சிங்களவர்கட்கு முதன்மை அளிக்கப்படுகிறது, பொருளாதார அபிவிருத்திக்குப் பணம் ஒதுக்கப்படும்பொழுதுகூட தமிழ்ப்பகுதிகள் புறக்கணிக்கப்படுகின்றன: இதனால் இப்பகுதிகள் விவசாயம், நீர்ப்பாசனம், கைத்தொழில்கள் என்பன அபிவிருத்தியடையாத நிலையில் உள்ளன: சிங்கள பூர்ஷுவா அரசின் அதிகாரமுள்ள சிங்கள உத்தியோகத்தர்களினால்வடக்கு ஆளப்படுகிறது. பிரிகேடியரொருவரை இணைப் பாளராகக் கொண்ட இராணுவமொன்று அங்குண்டு. கல்வி வாய்ப்பிலும் வேலைகள் பெறுவதிலும் தரப்படுத்தலும்; மாவட்ட ஒதுக்கீடுகளும்; சம அந்தஸ்தை மறுக்கின்றன; சிங்களப் பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் தமிழ்ப்பிரிவை மூடுதல், தமிழ்ச்சிறுவர்களின் தாய்மொழியை (வழமையாக ஒரு பிள்ளை மிகத் திறமையாகப் பயிலும் ஊடகமான மொழி) அழித்து பலவந்தமான கலாச்சாரப் புகுத்தலுக்கு வழிவகுக்கின்றது;

## 4. தமிழர்கள் சிங்கள ஏகாதிபத்தியத்தினால் ஒடுக்கப்படுகிறார்கள்

பொதுவாக இது இளந்தலைமுறையினர் உட்பட தேசிய தமிழ் அரசியல் வாதிகளின் பேச்சுக்களில் காணக்கூடியதாக உள்ளது. சரியான விஞ்ஞான நோக்கில் அதாவது லெனினிச நோக்கில் முதலாளித்துவத்தின் வளர்ச்சியடைந்த உயர் நிலையே ஏகாதிபத்தியமாகும்: இலங்கையின் மூதலாளித்துவ பொருளாதாரம்.

(அ-து ஐ அமெரிக்க நாடுகள், மேற்கு ஐரோப்பா, யப்பான் போன்ற) ஏகாதிபத்திய (நவகாலனித்துவ) பொருளாதாரம் சார்ந்த உறவுகளுடன் விடுவித்துக்கொள்ள முடியாதபடி சிக்குண்டுள்ளது. அத்துடன் உலக முதலாளித்துவ அமைப்புடன் வெளிச்சுற்றிலுள்ள அலகாக இயங்கி வருகிறது, எனவே இந்நாட்டில் குறை விருத்தியடைந்த சார்ந்த முதலாளித்துவத்தை முதலாளித்துவத்தின் அதி உயர்ந்த விருத்தி நிலையான ஏகாதிபத்தியமெனக் கொள்ளமுடியாது.

தமிழ் மக்கள் ஆளும் சிங்கள பூர்ஷு வாக்களினாலும்; அதன் அரச கையாட்களாலும்; இனரீதியாக ஒடுக்கப்பட்டு வருகிறார்கள், அத்துடன் தமது சொந்த (சிங்கள) பூர்ஷுவாக்களால் சிங்கள மக்கள் சமூகரீதியாக சுரண்டப்பட்டு, ஒடுக்கப்படுவதுடன் மேற்கு நவகாலனித்துவ வாதிகளாலும் ஒடுக்கப்படுவது போல தமிழ் மக்களும் ஒடுக்கப்படுகின்றனர். எப்படியாயினும் சிங்கள மக்கள் இந்த பூர்ஷுவாக்களினால் இன ரீதியாக ஒடுக்கப்படவில்லை. வேறு விதமாகக் கூறுவதானால் சிங்கள தொழிலாளியும், விவசாயியும் தொழிலாளி, விவசாயி என்ற முறையினால் சுரண்டப்படுகிறானேயன்றிச் சிங்களவன் என்பதனாலல்ல. ஆனால் அவர்களைப் போன்ற தமிழர்கள் தமிழர்கள் என்பதற்காகவும்; தொழிலாளி என்பதாலும் சுரண்டப்படுகின்றார்கள் அத்துடன் தமிழ் பாமரர்கள் தமது சொந்த பூர்ஷுவா வர்க்கத்தினாலும் சுரண்டப்படுகின்றனர், ஆனால் அடிப்படை முரண்பாடு அவர்களிடையே இல்லை: அவர்களது இந்தப்போராட்ட முறையிலேயே தங்கியுள்ளது: தமிழ் மக்களின் முக்கிய எதிரி அவர்களது வெளி எதிரியான சிங்கள பூர்ஷுவாக்களும், அரச இயந்திரமுமே இதை சிங்கள ஏகாதிபத்தியம் என்று கருதுவதோ, சிங்கள மக்களென்றோ குழப்பக் கூடாது. கியூபா மக்களினது போல வியட்னாமியரின் உதாரணமும் அனுகூலமானதாகும்; அவர்கள் தமது போராட்டத்தின்போது அமெரிக்க மக்களை ஐக்கிய அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் குழப்பவில்லை இந்த அடிப்படை வித்தியாசம் ஆட்சியிலுள்ள இனத்தின் (இங்கு சிங்கள இனம்) தொழிலாள வர்க்கத்துடன் சிநேக பூர்வமான உறவை விருத்தி செய்ய அல்லது நடுவு நிலைமை வகிக்க அவசியமானதாகும்.

## 5. தேசியப் பிரச்சனையானது தமிழர்கட்குச் சலுகைகள் அளிப்பதன்மூலம் சீர்திருத்தப்படலாம்

சலுகைகள் என்னும் சொல்லைப் பாவித்தலே பிரச்சனையை முழுதாகத் தவறாகப் புலப்படுத்துகின்றன, பிரச்சனை சலுகைகளை அளிப்பதல்ல தமிழ் மக்களின் தேசிய ஜனநாயக சட்ட உரிமைகளாகும்.

## 6. தேசியப் பிரச்சனை அரசியலமைப்புத் திருத்தங்கள் கொண்டுவரப்படுவதன் மூலம் தீர்மானிக்கப்படலாம்

இக்கருத்தை முன்வைக்கும் பலரில் சிறீலங்கா கம்யூனிஸ்ட் கட்சி பல அரசியலமைப்புத் திருத்தங்களைப் பிரேரித்துள்ளது. அது பிரதேச சுயாட்சி; மொழி—கலாசார—கல்வி உரிமைகள் பற்றியவை. ஆனால் விஞ்ஞான சோஷலிச வாதிகளைப் பொறுத்தவரை யாராவது தேசியப் பிரச்சனையைப் பாட்டாளி வர்க்கப் புரட்சிப் பிரச்சனையின் ஒரு பகுதியாகக் கருதினால், அதை அரசியலமைப்புடன் தொடர்புபடுத்திக் குறைக்கக் கூடாது, அல்லது எதிர்மாறாக தேசிய இனப் பிரச்சனையைப் பாட்டாளி வர்க்கப் புரட்சிப் பிரச்சனையிலிருந்து பிரிக்கும் ஒருவரே அதை அரசியலமைப்பு விடயத்திற்குக் குறைக்க முடியும். (ஸ்ராலின்)

## 7. மொழி, கலாச்சாரம், கல்வி என்பனவற்றில் தமிழர்கட்குச் சம உரிமை அளிப்பதன் மூலம் தேசிய இனப் பிரச்சனை தீர்க்கப்படலாம்

இதுவே ல. ச. கட்சியைக்கொண்ட கருத்தாகும் ஜ வி. பெ. மற்றும் விடுதலைக் கட்சிகள் முன் வைத்ததும் இப்படிப்பட்ட கருத்தையே. ஆனால் தேசியப் பிரச்சனையை அரசியலதிகாரத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லிருந்து பிரித்து கலாசார மொழி, கல்வி விடயங்களில் எல்லைப் படுத்த முடியாது; "பேனர், றெனர் என்பவர்களை ஒத்த ஆஸ்திரிய சமூக ஜனநாயக வாதிகளின் மந்தப் புத்திக்கான காரணம் என்னவெனில் அவர்கள் தேசியப் பிரச்சனைக்கும், அரசியல் அதிகாரத்திற்கும் உள்ள பிரிக்கமுடியாத தொடர்பை விளங்கிக் கொள்ளவில்லை. அவர்கள் தேசியப் பிரச்சனையை அரசியலில் இருந்து பிரித்து வெறுமனே கல்வி கலாச்சாரப் பிரச்சனைக்குள் அதை அடக்க முயற்சித்தார்கள்" (ஜே. வீ. ஸ்ராலின்)

"தேசிய சமத்துவ உரிமைகள்" என்ற இரண்டாவதுசர்வதேச சுலோகத்திற்கு எதிரிடையாக லெனின் "சுயநிர்ணய உரிமைப் பிரச்சனையானது, விசேடமாகவும் முழுதாகவும் அரசியல் ஜனநாயக எல்லையைச் சார்ந்தது. அது சுதந்திரமான தேசிய அரசுகளை ஸ்தாபித்தலும் அரசியற் பிரிவின் உண்மை நிலையுமாகும்" என அழுத்தமாகக் கூறினார். தேசியப் பிரச்சனைக்குத் தீர்வாக "கலாச்சார சுயாட்சி" வழங்குவது எல்லா அரசியல் பொருளாதார அதிகாரமும் ஆட்சியுள்ள இனத்தின் கையில் செறிந்துள்ளது என்பதையே உறுதிப்படுத்தும் என லெனினும், ஸ்ராலினும் சுட்டிக் காட்டினர்.

தேசியப் பிரச்சனையை ரோசா லக்செம்பேர்க்கின் பொருளாதாரக் கொள்கை ரென்னர் ஒட்டோ போயர் போன்றவர்களின் சீர்திருத்த நிலை போன்றவற்றைப் போலன்றி லெனின் "அரசியல் முதன்மை" (Potitics in Command) எனும் விதத்தில் அணுகினார்; "ருஷ்யாவின் பாட்டாளி வர்க்கம் இரு முனை அல்லது இருபக்க முயற்சிகளை எதிர்நோக்குகிறது. அது பொதுவாக எல்லா இனங்களும் சம உரிமை அடைவதற்கு மட்டுமன்றித் தேசிய இனங்கள் பிரிந்து போவதற்கான சுய நிர்ணய உரிமைகளில் சமத்துவத்தையும் குறிக்கிறது" உண்மையில் இந்த இருபக்க முயற்சியையே எமது இன்றைய முன்னேற்றம் எதிர்நோக்குகிறது.

8. இடதுசாரி இயக்கங்கள் தமிழர்களது சுய நிர்ணயஉரிமையை அங்கீகரிக்கவேண்டும் ஆனால் பிரிந்து செல்வதை எதிர்க்க வேண்டும். அத்துடன் பிரதேச சுயாட்சியையும் முன்வைக்கவேண்டும்.

இது லெனினினது கருத்திற்கு முற்றிலும் எதிர்மாறானதாகும் சுயநிர்ணயத்திற்கு அரசியல், சுயநிர்ணயம் நாட்டு சுதந்திரம் தனி அரசாக உருவாகி நிலைபெறுவதுபோன்றவற்றைத் தவிர வேறு அர்த்தங்களை எடுத்துக் கூறுதல் தவறாகும் என லெனின் மிகத்தெளிவுடன் திரும்பத்திரும்பக் கூறியுள்ளார். (தேசிய இனங்களின் சுய நிர்ணய உரிமை) உண்மையில் தேசிய சுய நிர்ணய உரிமைச் சுலோகம் தெளிவற்றதாக உள்ளதால் அது நன்கு வரையறுக்கப்பட்ட திதரிசனமான தேசிய இனங்களின் பிரிந்துசெல்லும் உரிமை எனப் பிரதியிடப்பட வேண்டுமென லெனின் கூறியுள்ளார் இடதுசாரிக் கட்சிகளும், குழுக்களும் தமிழர்களின் சுய நிர்ணய உரிமையை (தமது சொந்த அரசியல் விதியைத் தீர்மானிக்கும் உரிமையைப்) பற்றிப் பேசுவதும் தமிழ் மக்களின் போராட்டம் பற்றிப் பேசுவதும், அவர்களது போராட்டம் பிரதேச சுயாட்சிக் கோரிக்கைக்கு அப்பால் போகக்கூடாதெனத் தாமே தீர்மானிப்பதும் பொருளற்றவையாகும் (பொதுத்தேர்தலின்படி) 57% வடக்கு கிழக்கு மக்களும் வடக்கில் மட்டும் 70% ஆனோரும் பிரதேச சுயாட்சி சமஸ்டி எனப்படும் பகுதி சீர்திருத்த எல்லைக்கப்பால் சென்று பூரண இன விடுதலைக்கான தீவிர கோரிக்கைக்குச் சென்று விட்ட சந்தர்ப்பத்தில் இப்படிக் கூறுவது கேலிக்கிடமானதாகும்.

9. தமிழ் மக்கள் சிங்கள மக்களுக்குள்ள பிரச்சனைகளையே அனுபவிக்கிறார்கள். அதுபொருளாதாரத் தேக்கம் எனவே அவர்கள் இன அடிப்படையில் தனி நாடு கோர முடியாது

உலக பொருளாதார நெருக்கடியினால் வலுப்படுத்தப்பட்டு ஏகாதிபத்தியங்களினால் உருவான பொருளாதார குறைவிருத்திச் சுமையை தமிழ் சிங்கள இரு இன மக்களும் அனுபவிக்கின்றார்கள். ஆயினும் கைத்தொழில் மயமாக்கப்பட்ட மேற்கு இந்த நெருக்கடிச் சுமையைத் தன்னில் தங்கியுள்ள சிறீலங்காபோன்ற நாடுகளில் சுமத்துகிறது. இந்த நாட்டின் ஆளும் பூர்ஷ்வாக்கள் (ஆட்சியுள்ள இனத்தின்) இந்த நெருக்கடியைத் தமது சொந்த பாமரர்கள் மேலும் ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களின் மேலும் சுமத்துகின்றனர். அவற்றுள் தவிர்க்க முடியாத; தொகுதி சார்ந்த அரசியலிற்கான விகிதாசாரத்திற்குமதிகமான பங்கு தமிழர்கள் மேல் சுமத்தப்படுகிறது. முதலாளித்துவ பொருளாதார நெருக்கடி உலக பிரதேச உள்நாட்டு மட்டங்களில் விரிவடையும் பொழுது அளவுக்கதிகமான தேக்கம் தமிழ் மக்களை மேலும் புறம்பாக்குவதற்கு இடம் கொடுக்கிறது; மலேசியா மாணவரான S. H. Lee என்பவர் தனது "சிறீலங்காவின் நாட்டுப் புறவறுமை" என்னும் ஆராய்ச்சியில் 1963—1973 வருடங்களில் இலங்கைத் தமிழர்களின் தலைக்குரிய வருமானம் 28% என்பதைச் சுட்டிக் காட்டுகிறார்.

10, தமிழ் மக்கள் தமது தேசிய உரிமைகளை இப்போதுள்ள சமூக பொருளாதார அமைப்பிலேயே வென்றெடுக்க முடியும் அவர்களது போராட்டம் தற்போதைய சமூக பொருளாதார அமைப்பைக் கவிழ்ப்பது அல்ல. அப்படி இருக்கவும் கூடாது. எனவே மார்க்சிய கருத்துக்களுடனும், சிங்கள தீவிர இடதுசாரிகளுடனும் உள்ள தொடர்பு குறைந்தளவே

இக் கருத்து முதலாளித்துவ அமைப்பில் இணைந்துள்ள தமிழ் இளைஞர்களின் தீவிர அரசியற் போக்கை வெறுக்கும் சில தமிழ் அரசியல் வாதிகளினாற் அவர்களது வர்த்தக— உத்தியோக சார்புகளை விமர்சிக்காது விடுவோம் — கூறப்படுகிறது.

→ 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 3 மீன்பிடி முறைகள் பாவிப்பின்படி மீன்பிடி முகாமைத்துவ அலகுகள் பரவியுள்ள வீதம் (1973)

| மாவட்டம் | பூவலை % அலகுகள் | கரைவலை % அலகுகள் | தூண்டில் % அலகுகள் | சிறகுவலை போன்ற சாதுவான % அலகுகள் | வீச் சுவலை % அலகுகள் | வேறு முறை % அலகுகள் |
|---|---|---|---|---|---|---|
| புத்தளம் | 72·6 | 6·8 | 2·0 | 8·6 | 8·9 | 1·1 |
| மன்னார் | 68·3 | 11·1 | 3. 0 | 11·2 | 4·9 | 6·5 |
| யாழ்ப்பாணம் | 38·1 | 13·1 | 3·2 | 25·2 | 7·6 | 12·8 |
| வவு. + முல்லை. | 24·7 | 1·0 | — | 0·1 | 73·7 | 0·1 |
| திருமலை | 21·1 | 4·3 | 34·2 | 6·6 | 33·7 | 0·1 |
| மட்டக்களப்பு | 22·5 | 1·1 | 2·6 | 2·8 | 65·4 | 5·6 |
| அம்பாறை | 25·7 | 7·7 | 0.8 | 0·8 | 62·0 | 0·2 |

மீனவக் குடும்பங்கள் சொந்தமாகக் கொண்டுள்ள மீன்பிடிக் கலங்களையும், மீன்பிடி உபகரணங்களையும் உற்று நோக்குவது உபயோகமானதாகும். கரையோரங்களின் இயற்கை நிலைமை, கடலேரிகளின் நிலைமை ஒரு கிராமத்திலுள்ள மீனவக் குடும்பங்களின் அடர்த்தி, வலை பங்கீடு அண்மையிலிருத்தல், கடன் வழங்கும் நிறுவனங்களுடன் தொடர்பு கொள்ளும் வழி போன்ற காரணிகள் மேற்கூறியவற்றைச் சொந்தமாக வைத்திருப்பதைத் தீர்மானிக்கின்றன. அட்டவணை 4 இவ்விபரங்களைத் தருகிறது:

அட்டவணை 4 மீன்பிடிக் கலங்களை, மீன்பிடி உபகரணங்களை சொந்தமாகக் கொண்டுள்ள மீனவக் குடும்பங்களின் எண்ணிக்கை:

| மாவட்டம் | மொத்த மீனவக் குடும்பங்களின் எண்ணிக்கை | கரைவலை உடமையாளர்களின் எண்ணிக்கை | உள் இணைப்பு இயந்திரங்களின் உடமையாளர்களின் எண்ணிக்கை | வெளி இணைப்பு இயந்திர உடமையாளர்கள் எண்ணிக்கை | இயந்திர மயமாகாத மீன்பிடிக் கல உடமையாளர்கள் | மீன்பிடி உபகரண உடமையாளர் | ஏனையோர் |
|---|---|---|---|---|---|---|---|
| புத்தளம் | 6289 | 126 | 263 | 717 | 1642 | 842 | 2699 |
| மன்னார் | 2093 | 125 | 26 | 127 | 357 | 253 | 1205 |
| யாழ்ப்பாணம் | 7966 | 137 | 415 | 890 | 2621 | 2273 | 1624 |
| வவுனியா | 919 | 9 | 26 | 143 | 125 | 593 | 26 |
| திருகோணமலை | 2348 | 60 | 70 | 49 | 575 | 625 | 969 |
| மட்டக்களப்பு | 4679 | 40 | 66 | 58 | 1802 | 2001 | 712 |
| அம்பாறை | 4686 | 749 | 8 | 44 | 481 | 641 | 2763 |

தமிழ் பிரதேச மீனவர்கள் பெரும்பாலும் மீனவக் குடும்பங்கள் ஒவ்வொன்றும் தாமே சொந்தமாகத் தனித் தனியாகத் தொழிற்படுகின்றனர். கடலில் இடையூறு ஏற்படும்போது அல்லது அரசாங்கத்திடமிருந்து வசதிகளைப் பெறுவதற்காகக் கூட்டாகத் தொழிற்படுகின்றனர். அட்டவணை 5 இவ்விபரங்களைத் தருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 5 மீன்பிடிக் குடும்பங்கள் மீன் பிடியில் பங்கு கொள்ளும் முறைகளின் வீதம் (1973)

| மாவட்டம் | மொத்த மீனவர் குடும்பங்கள் | சொந்த மீன்பிடியில் | கூட்டுறவு உறுப்பினராக | பிரத்தியே தனியார் கூட்டு | வேறு வகை |
|---|---|---|---|---|---|
| புத்தளம் | 6289 | 44·7 | 2·4 | 18·4 | 34·5 |
| மன்னார் | 2093 | 25·9 | 0·4 | 25 2 | 48·5 |
| யாழ்ப்பாணம் | 7966 | 65·6 | 0·8 | 14·2 | 19·2 |
| வவு. + முல்லை, | 919 | 96·6 | 0·5 | 0·9 | 2·0 |
| திருமலை | 2348 | 51·9 | 1·7 | 6·6 | 39·8 |
| மட்டக்களப்பு | 4679 | 83·7 | 0·1 | 1·2 | 15·0 |
| அம்பாறை | 4686 | 24·7 | 15·2 | 13·5 | 46·6 |

தமிழ் பிரதேச மீன் உற்பத்தி படிப்படியாக அதிகரித்துக்கொண்டு செல்கின்றது. மீன் பிடிக்கலங்களின் இயந்திரமயமாக்கல், செயற்கை நார்கள் மீன்பிடி உபகரணங்களுக்கு உபயோகிக்கப்படுதல் ஐஸ் உற்பத்தி அதிகரித்த கொண்டு செல்லல் வசதிகள், மீனவர்கட்குக் கடன் வசதிகள், துறைமுக நங்கூரமிடும் வசதிகளின் முன்னேற்றம், இங்கள நாட்டில் உடன் மீனிற்கு உள்ள பெரும் கேள்வி அரசின் தூண்டுதல் போன்றவை இவ்வதிகரிப்பிற்கு மூக்கிய காரணமாகும். 1953-ம் ஆண்டிலிருந்து உடன் மீன் உற்பத்தி 5 மடங்கு அதிகரித்துள்ளது. அட்டவணை 6 1953 –1970 வருடங்களில் மதிப்பிடப்பட்ட தமிழ் பிரதேச உடன் மீன் உற்பத்தியைத் தருகிறது. (மெட்ரிக் தொன் களில்)

| ஆண்டு → | 1953 | 1955 | 1961 | 1962 | 1963 | 1964 |
|---|---|---|---|---|---|---|
| புத்தளம் | 3945 | 8643 | 12384 | 8546 | 18507 | 10154 |
| மன் + யாழ் + வ. | 9086 | 11335 | 21936 | 35249 | 30988 | 50263 |
| திருமலை + மட். | 5635 | 5039 | 13953 | 30009 | 32782 | 24844 |
| மொத்தம் → | 18666 | 25017 | 48273 | 63804 | 72277 | 85262 |
| **ஆண்டு →** | **1965** | **1966** | **1967** | **1968** | **1969** | **1970** |
| புத்தளம் | 9937 | 11408 | 9816 | 9096 | 10766 | 6450 |
| மன் + யாழ் + வ. | 34473 | 37908 | 35397 | 40198 | 39736 | 34552 |
| திருமலை + மட். | 18345 | 19659 | 17208 | 38466 | 20999 | 15815 |
| மொத்தம் → | 62755 | 68975 | 62421 | 87760 | 71501 | 56817 |

தமிழ் பிரதேசத்திற் பிடிக்கப்படும் மீனின் நிறையில் 15% உப்பிட்ட கருவாடாக மாற்றப்படுகிறது. இவில் தமிழ் நாட்டில் மட்டுமே கருவாடு உற்பத்தி செய்யப்படுகிறது. மிகச் சிறிதளவே சிங்கள நாட்டில் உற்பத்தி செய்யப்படுகிறது. மொத்த கருவாட்டில் 32% யாழ்ப்பாண மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படுகிறது தமிழ் ஈழத்தின் வெவ்வேறு பகுதிகளில் கருவாடு உற்பத்தி பின்வருமாறு புத்தளம் 12-5%, மன்னார் 19-5% யாழ்ப்பாணம் 31-8%, வவுனியா 14%, திருகோணமலை 3-3%, மட்டக்களப்பு 3-2%, அம்பாறை 16-6%.

வருடாந்தம் 6000 மெற்றிக் தொன் கருவாடு உற்பத்தி செய்யப்படுகிறது. இங்கு உற்பத்தியாக்கப்படும் கருவாட்டில் கிட்டத்தட்ட 60% சிறிய அளவிலான கரைவலை வகைகளைச் சேர்ந்ததாகும்.

→ 12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சுய ஆட்சி என்பது ......

பாஸ்க்களுக்கு அடிக்கடி அற்றுப்போன, பகுதியான சுயாட்சியின் நீண்ட வரலாறு உண்டு. குறிப்பாக வடக்கின் அல்ாவா, கிப்பஸ்கோவா, விஸ்காயா மாகாணங்கள் பல தட்வைகளில் அடக்கப்பட்டிருந்த போதும் மற்றக் காலங்களில் கணிசமான அளவு சுதந்திரத்தை அனுபவித்து வந்தன. 1790-ம் ஆண்டுகளில் பிரெஞ்சுப் புரட்சி அரசு எல்லையை அடுத்திருந்தவர்களை அடக்கியது. 19-ம் நூற்றுண்டில் முதல் முறையாக ஸ்பானிய ஆதிக்கமும் ஒடுக்க ஆரம்பித்தது. மீண்டும் அண்மைக் காலத்தில் ஸ்பானிய குடியரசு யுத்தத்தில் பங்கேற்காததற்காக பிராங்கோவின் அரசாங்கம் அவர்களைப் பழிவாங்கியது. நான்காவது வடக்கு மாகாணமான நவாறே சற்று வித்தியாசமானது, இங்கு பாஸ்க் அல்லாதவர்கள் பெரும் எண்ணிக்கையில் வாழ்கிருர்கள். இவர்களில் பெரும்பகுதியினர் ஸ்பெயினின் ஒற்றையாட்சியில் இணைந்து வாழவே விரும்புகின்றனர். மீதியானேர் சுதந்திரக்கோரிக்கையை ஆதரிப்பவர்கள்.

கடந்த ஏப்பிரலில் ஜெனரல் Junta நடத்திய பொதுத் தேர்தலில் முக்கியமான மூன்று பாஸ்க் மாகாணங்களும் ஏதாவது ஒருவகை சுயாட்சியை ஆதரிக்கும் தேசியக் கட்சிகளை 3:1 என்ற அளவில் ஆதரித்து வாக்களித்தன. அதிலும் ⅔ பங்கு வாக்குகள் பழமை வாய்ந்த மிதவாதக் கட்சியான பாஸ்க் தேசிக் கட்சிக்குக் கிடைத்தன. இருப்பினும் தேசிய இடதுசாரி அணிகளின் கூட்டான ஹெறிபட்டாசுனுவின் குறிப்பிடத்தக்க வெற்றியே மாட்ரிட் (ஸ்பெயினின் தலைநகர்) அரசாங்கத்தைக் கலக்கத்துக்குள்ளாக்கியது. ஏனெனில் பாஸ்க்சுதந்திரத்தைப் பொறுத்தவரை இவர்கள் உறுதியான, விட்டுக்கொடுக்காத, தீர்வுக்கு வரமுடியாத நிலையைக் கடைப்பிடிக்கிருர்கள். இந்தத் தேசிய வாதிகளில் ரெலஸ்போரோ மொன்சன் என்பவர் முக்கியமானவர், இவர் 1930 களில் சிறிது காலம் சுதந்திரமாக விளங்கிய பாஸ்க் குடியரசின் உள்ளூராட்சி அமைச்சராக விளங்கியவர். இப்பொழுது ஹெறிபட்டாசுனு கட்சியின் பிரதித் தலைவராக உள்ளார். அண்மையில் இவர் பாராளுமன்றத்தில் இப்படிக் கர்ச்சித்தார். "ஸ்பானிய பொலிஸ் எமது பிரதேசத்தை அத்துமீறி ஆட்கொண்டிருக்கும் படையாகும். நாங்கள் ஸ்பெயினுடன் யுத்தத்தில் ஈடுபட்டுள்ளோம்"

### தேசியத்துவம் ஒரு ......

ஆகையால் இடதுசாரிகளுக்கெதிரான சிங்கள பூர்ஷுவாக்களுடன் பேச்சு வார்த்தை நடத்துதல் போன்ற பாராளுமன்ற போராட்டப் பாதையை அவர்கள் ஆதரிக்கிருர்கள். பூர்ஷுவாக்கள் அரசியலில் ஆட்சி செலுத்துவதையோ, நாடுகள் தனிப்பட்ட சொத்தில் தங்கி உள்ளதையோ, தேசிய முரண்பாடுகள், போராட்டங்கள் போன் போன்றவற்றின் அடிப்படைகளையோ அவர்கள் உணரவில்லை. பூர்ஷுவா ஜனநாயக வாதிகள் சுரண்டல் அமைப்புடன் இணைந்து தேசிய முரண்பாடுகளை ஒழித்து இன உரிமைகளை வழங்குவதற்குப் பல ஆண்டு காலமாகப் போராடி வருகிருர்கள். ஆனல் பல இனங்களைக் கொண்ட பூர்ஷுவா நாடுகளில் இம் முரண்பாடுகள் தீர்க்கப்பட முடியாதவை என்பது ஒரு பரிதாபமான நிலையாகும். தனி உடமையையும், வர்க்க வேறுபாடுகளையும் வைத்துக்கொண்டு தேசிய சிறுபான்மையினரைப் பாதுகாக்கவும், இரு இனங்களைச் சமமாக்கவும் எடுக்கும் முயற்சி ஒவ்வொன்றும் வழமையில் இன்னெரு தோல்வியிலேயே முடிகின்றன. இவை தேசிய முரண்பாட்டை மேலும் பெரிதாக்கவே உதவுகின்றது" [ஸ்ராலின்]

எனவே பூர்ஷுவா சமூதாயம் தேசியப் பிரச்சனைக்குத் தீர்வுகாண முற்றாக இயலாததென நிரூபிக்கப்பட்டுள்ளது. (உண்மையில் தேசிய இன ஒடுக்கலின்றி முதலாளித்துவம் நிலைத்திருப்பது நினைக்கவும் முடியாததொன்றாகும் ஆகையால் ஒரே ஒரு வழி முதலாளித்துவத்திற்கு முடிவுகட்டி, உற்பத்தி சாதனங்கள், கருவிகளைக் கூட்டு உடமையாக்கும் நிலையை உருவாக்குதலேயாகும். எனவே தேசியப் பிரச்சனைக்கும், முதலாளித்துவ ஆட்சி முதலாளித்துவத்தை வீழ்த்தல் ஏகாதிபத்தியத்திலிருந்து அதிகாரத்தை விடுவித்து உழைக்கும் மக்களிடம் மாற்றுதல் என்னும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை உருவாக்கும் பிரச்சனைக்கும் ஒரு ஒழுங்கு படுத்தப்பட்ட தொடர்புண்டு. ★

### தமிழ் பிரதேசத்தின் மீன்பிடித் ......

15 மீற், சராசரி ஆழமும் கொண்டுள்ள பகுதியொன்றில் ஒளித்தொகுப்பினல் நிலைப்படுத்தப்படும் காபனில் 0·03 வீதம் மட்டுமே உண்மையான மீன்பிடியாகுமென மதிப்பிட்டுள்ளனர். அதே வேளையில் (1957) ல் நீல்சன் ஜென்சன் என்பவர்கள் மீன்பிடி பெருமளவு இயந்திரமயமாக்கப்பட்ட வடகடல் பிரதேசங்களில் மதிப்பீட்டின்பொழுது 0 2 — 0 3 வீதம் வரையிலான நிலைப்படுத்தப்பட்ட காபன் மீனுக அறுவடை செய்யப்படுகின்றது எனக் காட்டியுள்ளனர். இந்திய விஞ்ஞானிகள் இந்தியக் கரையோரங்களின் மீன்பிடி வளம், உண்மையான மீன்பிடியை விட 7—10 மடங்கு கூடியது எனக் கூறினர்.

மேலே காட்டிய மதிப்பீடு உண்மையான பட்சத்தில், தமிழ்ப் பிரதேசத்தின் அண்மைக் கரையோரங்களைச் சுற்றி மீன்பிடியானது. தற்போதைய அளவை விட பல மடங்கு அதிகமானதாக இருக்கும். உண்மையான மீன்பிடி வருடமொன்றிற்கு 80,000 மெட்ரிக் தொன்னுகும் எனவே உள்ளூரவுள்ள அளவானது குறைந்தது வருடமொன்றிற்கு 300,0000 மெட்ரிக் தொன்னுக இருக்கலாம் மீன் உற்பத்தி அதிகரிப்பு வீதம் வருடமொன்றிற்கு 10000 மெட்ரிக் தொன்னுக இருந்தாலும் கி. பி. 2000 ஆண்டிலே தான் இந்த இலக்கை அடைய முடியும். ★

---

மனிதனில் வெளிவரும் எல்லா விடயங்களும் தணிக்கை குழுவினரால் அங்கீகரிக்கப்பட்டவையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிட்டத்தட்ட 600—700 மெட்ரிக்தொன் நிறையுள்ள குளி குட்டப்பட்ட இறால்கள் ஒவ்வொருவருடமும் இலங்கை யிலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்றது. இவற்றில் பெரு மளவு வடக்குக் கிழக்குக் கரையோரங்களிலுள்ள கழி முகங்களிலிருந்து பிடிக்கப்படுகின்றது. இவ் ஏற்றுமதியிற் தமிழ் ஈழம் பெரும்பங்கை அளிக்கின்றது.

கிட்டத்தட்ட 150 மெட்ரிக் தொன் உலர் நிறையுள்ள கடலட்டை ஒவ்வொரு வருடமும் சிங்கப்பூருக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது. சிங்கப்பூரின் கடலட்டை இறக்குமதி யில் $\frac{1}{2}$ பங்கு தமிழ் பிரதேசத்திலிருந்தே பெறப்படுகின்றது. கொலொத்துரிய ஸ்காப்ரா (Holothuria Scabra) எனும் இனத்தைச் சேர்ந்த கடலட்டை தமிழ் ஈழத்தின் பாக்கு நீரிணை, மன்னார், வளைகுடாக்களிலிருந்து மீனவர்களாற் கடலில் சுழியோடிப் பிடிக்கப்படுகின்றது.

மன்னார், பாக்கு நீரிணைப் பகுதிகளில் சுழியோடிகளான மீனவர்களாற் பிடிக்கப்படும் சங்கு பங்களா தேசிற்கும் இந்தியாவிற்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றது. பட்டி, ஜாதி, சிறியதரம் ஆகிய மூன்று தரமாக ஏற்றுமதி செய் யப்படுகின்றது. இவற்றின் உபயோகமானது பெருமளவில் தமிழ் நாட்டுக் கோவில்களுடன் மட்டுப்படுத்தப்பட்டுள் ளது; வழமையாக சங்குகள் இடம்புரியானவை; சிலவேளை களில் வலம் புரிச் சங்குகளும் காணப்படுகின்றன. இவை மிகப் பெருந் தொகைக்கு விலை போகின்றன.

பழைய காலங்களில் முத்துக்குளிக்கும் துறைகள் யாழ்ப் பாண அரசர்கட்குச் சொந்தமாக இருந்தன. 14-ம் நூற் றாண்டின் பிரசித்தி பெற்ற பிரயாணி இபான்—பத்துத்தா என்பவர் யாழ்ப்பாண அரசின் ஆரியச்சக்கரவர்த்தியை முத்துக் குளித்தலொன்றின் பொழுது சந்தித்ததைப் பற் றிக் குறிப்பிட்டுள்ளார்.

முத்து வங்கிகள், தங்கச் சுரங்கங்கள் எனக் கொள்வது தவறானது; இது அரசிற்கு வரிவருமானத்தையும் உல்லா சத்துறைப் பிரசித்தியையும் மட்டும் கொடுக்கும். செயற், கைமுறையில் வளர்க்கப்படும் முத்துக்கள் இயற்கை முத் துக்களிலிருந்து வேறுபடாதபோதும் இது முத்துவிரும்பி களின் கவனத்தை ஈர்க்கவில்லை. தமிழ்நாடு அரசு மன்னார் வளைகுடாவின் இந்திய பகுதியில் செயற்கை முறையில் வெற்றிகரமாக முத்துக்களை வளர்த்துள்ளது.

தமிழ் பிரதேச குடாக்கடல்களிலும் ஆழம் குறைந்த கழிமுக நீரிலும்கடற்களைகள் பெருமளவில் நன்குவளர்கின் றன. புத்தள கடலேரி, பாக்கு நீரிணை, யாழ்ப்பாணக்கட லேரி, கொட்டியார் குடாக்கடல், மட்டக்களப்புக் கட லேரி என்பன அல்காக்களின் வளர்ச்சிக்குப் பொருத்தமான சூழலைக் கொண்டுள்ளன. கிறேசிலேரியா இனம் மற்றும் வர்த்தக ரீதியில் உபயோகப்படக் கூடிய இனங்களும் மூதூரிலும், மண்டை தீவில் ஏற்றுமதிக்காக மட்டும் அறு வடை செய்யப்படுகின்றன. இவற்றை வளர்ப்பதற்குச் செய்யப்பட்ட பரிசோதனைகள் வெற்றியளித்துள்ளன; (சிவபாலன் M. Sc. தாவரவியல்; யாழ் பல்கலைக் கழகம் 1977)

உள்ளூர் நுகர்விற்காகச் சுறா ஈரலிலிருந்து ஈரல் எண் ணெய் வடிக்கப்படுகிறது. சுறாச் செட்டைகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இடத்திற்கிடம் எடுத்துச் செல்லும் பொழுது பாதுகாத்துவைப்பதற்காக 25000 மெட்ரிக் தொன் ஐஸ் உற்பத்தி செய்யப்படுகிறது. எனினும் இது மொத்த தேவையில் ஒரு சிறு வீதமே; மீன் அடைக்கும் நிறுவன மொன்று பேசாலையில் உள்ளது. இது ஒரு கண் துடைப்பாகும்; உடன் மீனிற்குத் தொடர்ந்து உறுதியான கேள்வி உள்ளது எனவே மீன் பதனிடுதல் மூன்றாமிடத் தையே பெறுகின்றது; எனவே மீன் அடைக்கும் தொழிற் சாலை உபயோகமற்றதாகும்.

மீன்பிடித் துறைமுகங்களும் நங்கூரமிடும் வசதிகளும் மிகவும் குறைவாகும். தரையிலிருந்து கடற்கரையை அடைதல் பொதுவாகக் கடினமாக உள்ளது, மீனவர்கள் கால நிலைகளால் அழிக்கப்படக்கூடிய ஓலைகளால் வேயப் பட்ட கூரைகளுடன் கூடிய சேற்றுக் குடிசைகளிலேயே வசித்து வருகிறார்கள்,

## மீன் நுகர்வு:

தமிழ் பிரதேசத்தில் ஒவ்வொருவரும் வருடமொன் றில் 15 கிலோ கிராம் மீனை நுகர்வதாக மதிப்பிடப்பட் டுள்ளது. இதனுல் தமிழ்ப் பிரதேசத்தின் மொத்த வரு டாந்த நுகர்வு 30,000 மெட்ரிக் தொன்னாகும். மொத்த வருடாந்த மீன் உற்பத்தி 80,000 மெட்ரிக் தொன்னாகும்; தமிழ் பிரதேசம் தேவைக்கு மேலதிகமான மீனை உற்பத்தி செய்கிறது. கிட்டத்தட்ட மீன் உற்பத்தியில் $\frac{3}{5}$ பங்கு சிங்கள நாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது; சிங்கள நாட்டில் மீன் நுகர்வுக்குரிய கேள்வி அதிகமாக இருக் கின்றது. எனவே மிகுதி அராபியக் கடலைச் சுற்றியுள்ள நாடுகளிலிருந்து உலர் நிலையில் இறக்குமதி செய்யப்படும் மீனினால் நிரப்பப்படுகின்றது. தமிழ் பிரதேசத்தில் நுக ரப்படும் 30,000 மெட்ரிக தொன் தவிர்ந்த மீன், மீன்பிடி உற்பத்திப்பொருள்கள் என்பன சிங்கள நாட்டின்நுகர்விற் காக அனுப்பப்படுகிறது;

சராசரியாக ஒரு கிலோகிராம் 5 ரூபா அல்லது ஒரு மெட்ரிக் தொன் 5000 ரூபா வரை பெறும். தமிழ்ப்பிர தேசம் இவ் வியாபாரத்தினால்வருடமொன்றில் 2500லட்சம் ரூபாவைப் பெறுகின்றது. இத்தொகை வடக்கு, வட மேற்கு கிழக்குக் கரையிலுள்ள 30,000 குடும்பங்களினால் பகிரப்படுகின்றது.

## மூலவளங்கள் — ஒரு ஆய்வு

1969 இலும், 1963 இலும் பிரசாத் நாயர் என்பவர்கள் இந்தியக் கரையோரக் கடலில், 10 கிலோ மீற். அகலமும்

11 ←

இப்பிரசுரம் பண்டத்தரிப்பு பிரதான வீதியிலுள்ள திரு. அ. விமலதாசன் என்பவருக்காக யாழ்ப்பாணம் 102, பிரதான வீதியிலுள்ள செண்; பிலோமினு அச்சகத்தில் அச்சிட்டு 30-8-79-ல் வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the G. P. O; Under no Q. R. 8935/78.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org